| | | |
|---|---|---|
| O.S No. | : | 165/2014 |
| DATE | : | 17.11.2025 |
| பெயர் | : | காருண்யாதேவி |
| கணவர் பெயர் | : | லட்சுமி நாராயணன் |

வாதி தரப்பு பி.வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி

7. சாட்சியிடம் பி.வா.சா.ஆ–7 காண்பிக்கப்பட்டது அதில் ஊத்துக்காடு கிராம எண் 112 என்று குறிப்பிடப்பட்டுள்ளது, பைமாஷ் எண் யூ.டி.ஆர் ல் இருந்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பைமாஷ் எண் மற்றும் கிராம எண் வேறு என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஊத்துக்காடு கிராமத்தில் இரண்டு பிளாக் எண்கள் உள்ளது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் தாக்கல் செய்துள்ள அனைத்து சான்று ஆவணங்களும் கிராம எண் 112ல் வருகிறது, தாவா சொத்திற்கும் அதற்கும் சம்மந்தம் கிடையாது என்றால் சரியல்ல. எனது தந்தை வாங்கிய பி.வா.சா.ஆ–2 கிரைய ஆவணத்திலேயே கிராம எண் 112ற்கு உட்பட்டது என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. எனது தந்தை எனக்கு எழுதி வைத்த உயில் சாசனத்தில் சொத்தின் தன்மை பற்றியும் சுவாதினத்தை பற்றியும் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் கிணறு மற்றும் மின் இணைப்பு உள்ள விவரம் எனக்கு தெரியும். நாங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் மேற்படி கிணறு மற்றும் மின்சார இணைப்பு பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

9. எங்களது கிராம எண் 112ல் உள்ளது அதனை கிராம எண் 92ல் நாங்கள் தேட முடியாது, எங்களது சொத்து வேறு என்பதால் எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எங்கள் பெயரில் உள்ள பதிவு ஆவணங்கள் எதுவும் வாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு எதிராக எந்த பரிகாரமும் நாங்கள் கோர முடியாது, தாவா

சொத்து வாதிக்கு சொந்தமானது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் ஆவணங்கள் கிராமண எண் 92 பொறுத்து தான் அமைந்துள்ளது அவை அனைத்தும் வாதியின் பெயரில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எங்களது பண பலம் மற்றும் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி வாதியை மிரட்டி தாவா சொத்தை கையகப்படுத்த முயற்சிக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் பெயரில் எங்களது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி தவறாக குற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

10. தயாளனிடம் எழுதி வாங்கியது போல் வேறு யாரிடமாவது எழுதி வாங்கியுள்ளோமா என்றால் அதைப்பற்றி எனது தந்தைக்கு தான் தெரியும் எனக்கு தெரியாது. மற்ற நபர்கள் அரசியல் செல்வாக்கு உடைய நபர்கள் என்பதால் வாதியிடம் மட்டும் ஏமாற்றி பத்திரம் எழுதி வாங்கியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து வாதி இறந்ததற்கு பிறகு அவரது வாரிசுகள் பெயரில் மற்றும் அனுபவித்தில் உள்ளது எங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை – இல்லை.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.